**தலைப்பு 213 – கல்வி வெளியீட்டுத் திணைக்களம்**

---------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 213 – கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூன் 07 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தத.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

### (அ) வணிக முற்பணக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (i) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 511,397,303 ஆன இறுதியிருப்பின் பெறுமதி நடப்பாண்டின் உற்பத்திக் கணக்கின் ஆரம்பமீதி ரூபா 509,916,122 ஆக காண்பிக்கப்பட்டதன் காரணமாக நடப்பாண்டின் உற்பத்திக்கிரயம் மற்றும் இலாபம் ரூபா 1,481,181 இனால் முறையே குறைத்தும் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரிசெய்து கணக்குகளைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது ஆரம்ப மீதி சரியாகக் குறிப்பிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | அங்கீகரிக்கப்பட்ட முற்பணக்கணக்கின் பிரகாரம் அரச அச்சகத் திணைக்களத்திற்கும், அரச அச்சிடல் கூட்டுத்தாபனத்திற்கும் செலுத்த வேண்டியதாக முறையா ரூபா 2,253,600 மற்றும் ரூபா 168,097,238 காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களின் பெறுமதி முறையே ரூபா 26,044,505 மற்றும் ரூபா 715,624,110 ஆகக் காண்பிக்கப்பட்டதன் காரணமாக முறையே ரூபா 23,790,905 மற்றும் ரூபா 547,526,872 இணக்கமின்மைகள் காணப்பட்டது. | எழுத்துமூல உறுதிப்படுத்தலைப் பெற்று சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்கொடுத்தோர் மீதி சரியாக கணக்குகளில் உள்ளடக்குதல் வேண்டும். |
| (iii) | 2022 ஆம் ஆண்டுக்குரிய 03 தர தமிழ் வேலை புத்தகம் குறித்துரைத்த திகதியில் அச்சிட்டு வழங்காமையின் அடிப்படையில் அறவிடப்பட்ட ரூபா 505,236 தண்டப்பணம் கணக்கீடு செய்யப்படாதிருந்தமையால் தண்டப்பணப் பெறுவனவு வருமானம் ரூபா 505,236 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | தவறொன்றினால் கைவிடப்பட்டிருந்தது. | வருமானங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட முற்பணக்கணக்கில் உள்ளடக்கப்பட்ட 18 அச்சிடல் நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 2,274,851,649 தொகைக்குரிய மீதியை உறுதிப்படுத்தி கணக்காய்விற்கு சமர்ப்பிக்காமையின் காரணமாக அந்த கணக்கு கடன்கொடுத்தோர் மீதிகளில் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | கடன்கொடுத்தோர் மீதிகளை உறுதிப்படுத்துமாறு உரிய அச்சிடல் நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | கடன்கொடுத்தோர் மீதி உறுதிப்படுத்தல் நேரடியாக கணக்காய்விற்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (v) | 2009 ஆம் ஆண்டு முதல் நெஷனல் பேப்பர் கம்பனி லிமிட்டட் இல் இலிருந்து அறவிட வேண்டிய ரூபா 7,431,012 தொகை மீளாய்வாண்டின் போதும் அறவிடுதவதற்கு திணைக்களம் தவறியிருந்தது. | உரிய கடனை பதிவழித்தல் தொடர்பாக கைத்தொழில் அமைச்சுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | அறவிட வேண்டிய பணத்தை தாமதமின்றி அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டியிருந்ததுடன் காலரீதியில் அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**(ஆ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிதியல்லாச் சொத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 92.14 மில்லியன் பெறுமதியான ஹோமாகம பிட்டிபனவில் அமைந்துள்ள பாடப்புத்தக களஞ்சிய தொகுதியை நிர்மாணிக்கின்ற காணியின் சட்டரீதியான உரித்து உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | காணிக்குரிய ஹோமாகம மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்று விசாரணையில் காணப்படுகின்றமையால் அந்த தீர்ப்பின் பின்னர் கையளித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியுமென ஹோமாகம பிரதேச செயலாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. | காணியின் சட்டரீதியான உரித்தை திணைக்களத்திற்குப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | அங்கீகரிக்கப்பட்ட முற்பணக் கணக்கிற்குரிய நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றுக்களுக்கிடையே 08 நிலையான சொத்து விடயங்களின் பெறுமதியை ரூபா 39,089,545 தேறிய | நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் சிகாஸ் தரவு முறைமை தயாரிக்கும் வகைப்படுத்தலின் பிரகாரமே குறிப்பிடப்படுவதுடன் 2022 ஆம் ஆண்டில் இருந்து சிகாஸ் தரவு முறை தயாரிக்கும் போது | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட பெறுமதி அதற்குரிய ஏனைய அறிக்கைகளுடன் இணக்கம் செய்யப்படல் |

| | | |
|---|---|---|
| வேறுபாடொன்று காணப்பட்டது. | அங்கீகரிக்கப்பட்ட முற்பணக் கணக்கில் சொத்துக்களை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். |

**(இ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணிச்செல்லப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| **இழப்பு பதிவேடு**<br><br>நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் இழப்புத் தொடர்பான பதிவேடு பேணிச்செல்லப்படவில்லை. | எதிர்காலத்தில் இழப்பு தொடர்பான பதிவேட்டை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் உரிய படிவத்தின் பிரகாரம் இழப்புத் தொடர்பான பதிவேடு பேணிச் செல்லப்படல் வேண்டும். |

**(ஈ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் காண்பிக்கப்பட்ட ரூபா 92,145,416 பெறுமதியான காணி மற்றும் ரூபா 187,950,284 பெறுமதியான கட்டிடங்களின் பெறுமதி என்பவற்றை உறுதிப்படுத்துவதற்குரிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் உரிய தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துக்களின் பெறுமதியை உறுதிப்படுத்துவதற்குரிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 50(1) இன் பிரகாரம் வருடாந்த மதிப்பீடு இயலுமானவரை சரியாகவும், தேவையினை இனங்கண்டும் தயாரிக்காமையின் காரணமாக நிகழ்ச்சித்திட்டம் (2) இன் கீழ் மூலதன செலவின விடயத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாடு ரூபா 84,000,000 ஆக இருந்ததுடன் நிதிப்பிரமானம் 66 மாற்றல்களின் கீழ் ரூபா 1,100,000 பெறப்பட்ட பின்னர் தேறிய நிதியேற்பாடு ரூபா 85,100,000 ஆக காணப்பட்டது. அதில் ரூபா 10,675,284 மாத்திரம் செலவிடப்பட்ட பின்னர் 87 சதவீதமும் சேமிக்கப்பட்டிருந்தது. | தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்திற்கு கோரப்பட்ட தொகையினை விட GEM செயற்திட்டத்திற்காக ரூபா 55 மில்லியன் மேலதிகமாக வழங்கப்பட்டிருந்தது. | வருடாந்த மதிப்பீடு இயலுமான வரை சரியாகவும் தேவையினை இனங்கண்டும் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (i) | 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய 02/2017 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | திணைக்களத்தால் பயன்படுத்தப்படுகின்ற மூன்று வாகனங்களின் பதிவு உரித்தினைக் கையேற்பதற்கு 2024 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரையும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அந்த 03 வாகனங்களுக்காக மீளாய்வாண்டில் ரூபா 1,677,331 செலவினம் செய்யப்பட்டிருந்தது. | திணைக்களத்திற்கு கையேற்கும் கோரிக்கைக் கடிதம் கல்வி அமைச்சிற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 2/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கை | வருடாந்த செயல்நடவடிக்கைத்திட்டம் விரிவாகவும் தெளிவாகவும் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 2.3 வங்கிக்கணக்கு செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2024 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வங்கி இணக்கக்கூற்றின் பிரகாரம் ரூபா 557,574 கூட்டுத்தொகையான இனங்காணப்படாத 116 பெறுவனவு விடயங்கள் காணப்பட்டது. | அதிபர் படி செலுத்தும் போது வங்கிக்கு மீண்டும் பெறப்படுவதாக இருந்ததுடன் அவை வங்கிக்கணக்கு இலக்கம் பிழையாக இருந்தமை , வங்கிக் கிளை பிழையாக இருந்தமை மற்றும் மூடப்பட்டுள்ள வங்கிக் கணக்குகள் போன்ற சந்தர்ப்பங்களினால் இவ்வாறு ஏற்பட்டுள்ளது. | பெறுவனவுகளை சரியாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 02/2020 என்ற அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட படிவத்தின் பிரகாரம் வரைவு வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

### 3.2.1 பொதுக் கல்வி நவீன மயப்படுத்தும் செயற்திட்ட நிதியத்தின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | டிஜிட்டல் கற்பித்தல் உதவிகளின் வினைத்திறனை தீர்மானிப்பதற்காக தெரிவுசெய்யப்பட்ட 07 தலைப்புக்கள் தொடர்பான ஆராய்சிகளை மேற்கொள்ளும் நோக்கில் அதற்குரிய முன்மொழிவுகளை மேற்கொள்வதற்காக 2023 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களின் போது ரூபா 519,350 செலவிடப்பட்டு கல்வி நிருவாக சேவையின் 21 உத்தியோகத்தர்களுக்காக 05 செயலமர்வுகள் நடாத்தப்பட்டிருந்தது. உத்தியோகத்தர்களால் 06 தலைப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் அதில் ஒரு தலைப்பு மாத்திரம் தேவையான நோக்கங்களுக்கு உரியதாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | இந்த முன்மொழிவுகளை விடுவிக்கும் முன்மொழிவாக சுகந்திரமான முன்மொழிவாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இலக்கிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்காக வினைத்திறனாக செயற்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2023 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகள் (Activities) 08 இல் 06 இற்காக உப செயற்பாடுகள் (Sub activities) இனங்காணப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 07 விடயங்களுக்குரியதாக திட்டமிடப்பட்டிருந்த டிஜிட்டல் கற்பித்தல் உதவி எந்த வகுப்பு மாணவர்களுக்கானது என போதியளவான உற்பத்தி | திட்டமிடப்பட்ட உள்ளீர்த்தல் நடவடிக்கைகளுக்குரிய ஆலோசனைத் திட்டம் அங்கீகரிக்கப்படுகின்ற தரப்பிரனரால் வழங்கவேண்டியிருந்ததாக காண்பிக்கப்பட்டுள்ளது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிவேற்றுவதற்குரிய செயற்பாடுகள் விரிவாக காண்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்ததா என்பது தொடர்பாக குறித்துரைத்தவாறு குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | மீளாய்வாண்டின் போது சாதாரண கல்வியினை நவீன மயப்படுத்தும் செயற்திட்டத்தின் நிதியத்திலிருந்து கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 80,000,000 நிதியேற்பாடுகளை ஐந்து செயற்பாடுகளுக்காக ரூபா 5,600,025 அதாவது நிதியேற்பாடுகள் 7 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. | உரிய காலத்தில் கிடைக்காமையின் காரணமாக திட்டங்களை வெற்றிகரமாக செய்து கொள்ள முடியாதிருந்தது. | ஆண்டுக்குரிய நிதியேற்பாடுகளைப் பயன்படுத்தி திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்படல் வேண்டும். |
| (ஈ) | 2022 ஆம் ஆண்டின் செயற்திட்டத்தின் நிதியத்தில் ரூபா 7,678,441 பயன்படுத்தப்பட்டு சமூக சுகாதாரம் தொடர்பான வள புத்தகம் (16+) 15,000 பிரதிகள் அச்சிடப்பட்டிருந்தது. அதில் 2024 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு பகிர்ந்தளிக்கப்படாமல் 1765 புத்தகங்கள் களஞ்சியத்தில் எஞ்சியிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | திட்டமிடப்பட்ட பிரகாரம் அச்சிடப்பட்ட புத்தகங்களை பகிர்ந்தளித்தல் வேண்டும். |

### 3.3 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கேள்வி ஆவணங்களில் ஒப்பந்த தரவுகளின் கீழ் (10.0) இற்கு இணங்க போக்குவரத்தில் பயன்படுத்தப்படுகின்ற லொறி வண்டி பாடப் புத்தகங்களைப் பாதுகாக்கும் வகையில் ரூபா 1,000,000 காப்புறுதியொன்று பெறவேண்டியிருந்த போதிலும் தனியார் போக்குவரத்தது | பதில் பின்னர் சமர்ப்பிக்கப்படும். | கேள்வி ஆவணங்களில் காண்பிக்கப்பட்டுள்ள தேவைகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனத்தால் பாடப் புத்தகங்களை கொண்டு செல்வதற்கு பயன்படுத்தப்பட்ட 08 லொறிகளுக்காக அந்த காப்புறுதி மேவுகை பெறப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | கேள்வி ஆவணங்களில் கூறுவிலை சமர்ப்பிப்பதற்கு குறிப்பு இலக்கம் 6.0 மற்றும் 9.0 இல் காண்பிக்கப்பட்டுள்ள நிபந்தனையின் பிரகாரம் கேள்விதாரரால் கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட மேலதிக வாகனங்களுக்குரிய பூர்த்தி செய்ய வேண்டிய தேவைகள் எதுவும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | பதில் பின்னர் சமர்ப்பிக்கப்படும். | கேள்வி ஆவணங்களில் காண்பிக்கப்பட்டுள்ள தேவைகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். |

## 3.4 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 யூன் 01 ஆந் திகதி முதல் 2023 செப்தெம்பர் 12 ஆம் திகதி வரை திணைக்களத்தில் 05 உத்தியோகத்தர்களில் $19\frac{1}{2}$ மனிதநாட்களுக்காக கடமை விடுமுறை பெற்று பரீட்சை பணிகளில் ஈடுபட்டிருந்ததுடன் அதில் 04 உத்தியோகத்தர்களுக்கு 09 மனித நாட்களுக்காக மேற்கூறப்பட்ட பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | பரீட்சைக் கடமைகளுக்காக ஈடுபடுத்தும் போது பின்பற்றப்படவேண்டிய நடைமுறைகள் தொடர்பான கல்விச் செயலாளரின் ஆலோசனைகள் கோரப்பட்டுள்ளது. | அரச உத்தியோகத்தர்களினால் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கடமை விடுமுறை பெற்றுக்கொள்ளல் வேண்டும். |
| (ஆ) | 2023 கல்வி ஆண்டுக்காக சாதாரண தர பாடப்புத்தகங்களில் 32,890,400 பிரதிகள் அச்சிடுவதற்காக 26 அச்சிடல் நிறுவனங்களுடன் ரூபா 14,211,128,357 பெறுமதியில் உடன்படிக்கை | 2024 இன் கல்வி ஆண்டு ஆரம்பிப்பதற்கு முன் கட்டளையிடப்பட்டிருந்த பாடப்புத்தகங்கள் பாடசாலை மற்றும் பகிர்ந்தளிக்கும் | கல்வி நடவடிக்கைகளுக்கு இடையூறு இல்லாத வகையில் குறித்திரைத்த காலத்தில் பாடப்புத்தகங்களை |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்த போதிலும் முதலாவது பாடசாலை தவணை ஆரம்பிப்பதற்கு முன் அந்த பாடப்புத்தகங்களை உள்ளடக்கிய திணைக்களத்தால் அச்சிடப்படுகின்ற பிரேல் பாடப்புத்தகங்கள் 4,039 உம் பகிர்ந்தளிப்பதற்கு திணைக்களம் தவறியிருந்தது. | நிலையங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. | ப் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | லொறி வண்டி களஞ்சியத்திலிருந்து வெளியே சென்ற திகதி, மீண்டும் களஞ்சியத்திற்கு வருகை தந்த திகதி என்பவற்றைப் பரீட்சிக்கும் போது அந்த தினங்களுக்கிடையே, ஏனைய பிரதேசங்களில் அந்த லொறி வண்டி பாடப்புத்தகங்களை கொண்டு செல்வதற்கு இருந்தமை பாடப்புத்தகங்களுக்கு பொறுப்பான உத்தியோகத்தரினால் தயாரிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் பாடப் புத்தகங்களை பகிர்ந்தளிக்கும் உத்தியோகத்தர்களுக்காக செலுத்தப்பட்ட ரூபா 2,262,500 தொகையின் சரியான தன்மை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | 2023 ஆம் ஆண்டிற்குரியாத இனங்காணப்பட்ட இந்தப் பிரச்சினை 2024 ஆம் ஆண்டின் போது தீர்வு காண்பதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | பாடப்புத்தகங்களை பகிந்தளிக்கும் நடவடிக்கைகளை முறையான திட்டம் ஒன்றின் கீழ் மேற்கொள்ளல் வேண்டும். |